தமிழ்நாடு இந்து ஆலய அறநிலைய தருமகர்த்தர்கள்

முதல் மகாநாடு

மகாநாட்டு நிகழ்ச்சி அறிக்கை

3-11-57

தமிழ்நாடு இந்து ஆலய அறநிலைய
தருமகர்த்தர்கள் சங்கம்
142, சாமிநாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

தமிழ்நாடு இந்து ஆலய, அறநிலைய தர்மகர்த்தர்கள் சங்க

முதல் நிர்வாகக் குழுவினர்

தலைவர்:

திரு மணலி. இராமகிருஷ்ண முதலியார் B. A.,
(பரம்பரை தருமகர்த்தர்: சென்னை மல்லீச்வரர் & சென்னை கேசவப் பெருமாள் தேவஸ்தானம் & மணலி இலட்சுமண முதலியார் அறங்கள்)

துணைத் தலைவர்கள்:

திரு P. வரதராஜ முதலியார்,
(தருமகர்த்தர்; திருமயிலை கபாலீச்சரம். சென்னை.)

திரு காட்டாவூர் சுப்பிரமணிய செட்டியார்,
(தருமகர்த்தர்: ஸ்ரீமல்லிகேச்வரர் தேவஸ்தானம், சென்னை.)

திரு A. N. பரசுராமன், M. A.
(தருமகர்த்தர்: ஸ்ரீ ஏகாம்பரேச்வரர் தேவஸ்தானம், சென்னை; ஸ்ரீ மாசிலாமணீச்வரர் தேவஸ்தானம், வடதிருமுல்லைவாயில்; ஸ்ரீ வல்லீச்வரர் தேவஸ்தானம், பாடி.)

திரு T. புருஷோத்தம முதலியார் M. L. C
(தருமகர்த்தர்: ஸ்ரீ சுந்தரேச்வரர் தேவஸ்தானம், கோவூர்.)

திரு V. V. C. R. முருகேச முதலியார்,
(தருமகர்த்தர்: ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம், பழநி.)

செயலாளர்கள்:

திரு. கு. அய்யா, சுப்பிரமணிய முதலியார், J. P.
(பரம்பரை தருமகர்த்தர்: ஸ்ரீவிசுவநாத சுவாமி தேவஸ்தானம் விசயராகவபுரம்; தருமகர்த்தர்: திருமயிலை கபாலீச்சரம்; பைராகிமடம் திருவேங்கடாசலபதி தேவஸ்தானம், சென்னை.)

திரு க. சோமசுந்தர முதலியார்,
(தருமகர்த்தர்: ஸ்ரீ கங்காதரேச்வரர் வகையறு தேவஸ்தானம், சென்னை.)

பொருட்காப்பாளர்:

திரு S. வேங்கடரங்கம் செட்டியார்,
(தருமகர்த்தர்: ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி தேவஸ்தானம்; ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் & பேயாழ்வார் தேவஸ்தானம், சென்னை.)

தமிழ்நாடு இந்து
ஆலய, அறநிலைய தர்மகர்த்தர்கள்
முதல் மகாநாடு

தமிழ்நாடு இந்து ஆலய, அறநிலைய தர்மகர்த்தர்கள் சங்கத்தின் ஆதரவில் முதலாவது மகாநாடு 3—11—57 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை, புரசை லேடி. எம். சி. டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. பள்ளியின் வாயிலும் மகாநாட்டு மண்டபமும் பந்தல், மகர தோரணங்கள் முதலியவற்றாலும் ஆலய விருதுகளாலும் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தன. அன்று முழுதும் மழை பெய்தும் மகாநாடு மிகவும் சிறப்பாக நடந்தேறிற்று.

வேதம், திருமுறை, திவ்விய பிரபந்த பாராயணங்களுக்குப் பின் சௌ. சோம. யசோதா கீதம் பாடிய பிறகு மகாநாடு துவங்கியது. செயலாளர் திரு. க. சோமசுந்தரம் (தர்மகர்த்தர், புரசை கங்காதரேச்வரர்கோயில்) வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கத்தைப்பற்றிய அறிக்கையை செயலாளர் திரு கு. அய்யா. சுப்பிரமணிய முதலியார் (தர்மகர்த்தர், திருமயிலை கபாலீச்சரம்) சமர்ப்பித்து, சென்னை அரசாங்க அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களை மகாநாட்டைத் துவக்கிவைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். மந்திரி அவர்களின் திறப்புரைக்குப் பின் (இவை இரண்டும் பின்னே சேர்க்கப்பெற்றிருக்கின்றன).

திரு. ஏ.என். பரசுராமன் (தர்மகர்த்தர், சென்னை ஏகாம்ப ரேச்வரர், திருமுல்லைவாயில் மாசிலாமணீச்வரர் கோயில்கள்) தலைவர் பிரேரணையைப் பிரேரித்துப் பேசுகையில், இந்தியா வின் எல்லாக் கலைகளும் கலாச்சாரங்களும் கூடுமிடம் கோயில்களே என்றும், மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்கு அவை பொறுப்புள்ளவை என்றும் தர்மகர்த்தர்களும் அரசாங்கமும் இதைமறக்கலாகாது என்றும் வற்புறுத்தினர்.

திரு. காட்டாவூர் சுப்பிரமணிய செட்டியார் (தர்மகர்த்தர் கந்தசுவாமி கோயில், சென்னை) ஆமோதிக்க, சங்கத் தலைவர் மணிலி இராமகிருஷ்ண முதலியார் (பரம்பரை தர்மகர்த்தர், சென்ன மல்லீச்வரர், சென்ன கேசவப் பெருமாள் கோயில்கள், மணலி அறங்கள்) மகாநாட்டுக்குத் தலைமை வகித்து தலைமை உரையை நிகழ்த்தினர். (பின்னுல் சேர்க்கப் பெற்றிருக்கிறது).

மாலைக் கூட்டத்துக்கு துணைத் தலைவர் திரு டி. புருஷோத்தம் எம். எல். சி.,(ஸ்ரீசுந்தரேச்வரர் தேவஸ்தானம், கோவூர்) தலைமை வகித்தார். பல அறிஞர்கள் சொற் பொழிவுகளாற்றினர்கள்.

திரு. என். ரகுநாதையர் தம் சொற்பொழிவில் எந்தக் காரியங்களுக்காக இந்து ஆலயங்களும் அற நிலையங்களும் ஏற்பட்டனவோ அவற்றை நிறைவேற்றத் தர்மகர்த்தர்கள் பாடுபட வேண்டும் என்ருர். அவை மக்களின் ஆன்மீக உயர்வை அடையும் இடங்களாக விளங்கவேண்டும் என்ப தையும், அற நிலையங்களின் நிர்வாகத்தைப் பொதுஜன ஓட்டுகளாலும். சட்டங்களாலும் கட்டுப்படுத்த முயல்வது தவறென்றும், தர்மங்களை ஏற்படுத்தியவர்களின் எண்ணங் களை நிறைவேற்றுவது தர்மகர்த்தர்களின் கடமை என்றும் எடுத்துரைத்தார்.

திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் எம். எல். சி., தம் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு முழு அதிகாரங்களையும் பெறுவதற்குத் தர்மகர்த்தர்கள் முயல வேண்டும் என்று வற்புறுத்தினுர். மத ஸ்தாபனங்களின் நிதியை, அம் மத காரியங்களுக்காக அன்றி வேறு வழியில் செலவிடுவதை அவர் கண்டித்தார்.

திரு டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் பேசுகையில் ஆலயங் களின் உபரி நிதி, ஆலயங்களில் சத்சங்கம், மாதர் சங்கம் முதலியவை நிறுவி, சமய வளர்ச்சிக்கு உதவுவதிலும், பஜனைகள் நடத்தி பக்தியை வளர்ப்பதிலும் உபயோகமாக வேண்டும் என்ருர்.

திரு டி. புருஷோத்தம் எம். எல். சி, ஜில்லாக்களிலும் சங்கத்தின் கிளைகளைத் திறக்கவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். ஜில்லாக்கள்தோறும் அந்தந்த ஜில்லாவில்உள்ள கோயில்களின் உபரிநிதியைத் தொகுத்து அந்தந்த ஜில்லா விலேயே பாழ்பட்டுக் கிடக்கும் ஆலயங்களைப் புனருத்தார ணம் செய்யவேண்டும் என்று யோசனை கூறினுர்.

ஆலயங்களின் நிதியை மத சம்பந்த மற்ற காரியங் களுக்கு உபயோகப்படுத்தக் கூடாதென்றும், பக்தியையும் ஆஸ்திகத்தையும் பரப்ப அந்நிதி உபயோகமாக வேண்டும்; ஆலயங்களில் எல்லாவிதமான சடங்குகளையும் சாஸ்தி ரோக்தமாகக் குறைவில்லாமல் செய்ய வழிகாணவேண்டும் என்றும் வற்புறுத்தி திருவாளர்கள், கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள், ச. சச்சிதானந்தம் பிள்ளை, கி. வா. ஜகந்நாதன் (கலைமகள் ஆசிரியர்), சோமசுந்தரத் தம்பிரான், எம். டி. தியாகராஜ பிள்ளை எம். எல். ஏ. (அக்னீச்வரர் கோயில், திருப்புகலூர்), டி. எஸ். சுவாமிநாத உடையார் எம். எல். ஏ. (ராஜகோபால சுவாமி தேவஸ்தானம், மன்னுர்குடி)

வி. சங்கரன் எம். எல். ஏ. (மீனுட்சி சுந்தரேச்வரர் ஆலயம், மதுரை), பீ. எஸ். லட்சுமிபதி ராஜு (தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி) ஆகியவர்களும் மற்றும் பலரும் பேசினுர்கள்.

தீர்மானங்கள்

இடைவேளைக்குப் பின் மகாநாடு திரு டி. புருஷோத்தம் எம்.எல்.சி. தலைமையில் கூடிப் பல தீர்மானங்களை நிறைவேற்றியது. (பின்னுல் காண்க.)

வாழ்த்துச் செய்திகள்

மகாநாடு சிறப்பாக நடைபெற வாழ்த்தி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யசுவாமிகளும், திருவாளர்கள் திரு. கனகசபைப் பிள்ளை (திருக்கடவூர் பிச்சக் கட்டளை எஸ்டேட்) திரு வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் (தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழநி) டி. எம். சின்னையா பிள்ளை (முன்னுள் இந்து அறநிலைய கமிஷனர்) முதலியவர்களும் மற்றும் பலரும் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகள் மகாநாட்டில் படிக்கப் பெற்றன.

செயலாளர் திரு. கு. அய்யா. சுப்பிரமணிய முதலியார் நன்றி கூறினுர்.

கலை நிகழ்ச்சி

மகாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்பு, திருமதி எஸ். லலிதா அவர்கள் தக்க பக்க வாத்தியங்களுடன் இசையரங்கு நிகழ்த்தினுர்.

பின் மகாநாடு இனிது கலைந்தது,

— ❋ —

வரவேற்புரையின் சாரம்

க. சோமசுந்தரம், செயலாளர்.
[தர்மகர்த்தர். புரசை கங்காதரேச்வரர் ஆலயம்]

அன்பிற் சிறந்த பெரியோர்களே! அமைச்சர் அவர்களே!

அறக் காப்பாளர்கள் ஒன்ருகக் குழுமி, தங்கள் பொறுப்புக்கள் என்ன; கடமைகள் எவை; உரிமைகள் யாவை என்பதை ஆராய்ந்துபார்க்க இன்று இங்கே ஒருங்கு கூடியுள்ளார்கள். ஆலயங்கள், அறநிலையங்கள் ஆகிய வற்றின் அறக்காப்பாளர்களின் கோரிக்கைகளேச் செவி மடுக்கவும், அவர்களது முயற்சிகளுக்கு ஆசி வழங்கவும் நமது அறநிலைய இலாகா அமைச்சர் அவர்கள் இங்கு நம் மிடையே இருக்கிருர்கள். அவர்களே நன்றி கலந்த வணக் கத்துடன் வரவேற்கிறேன்.

இன்று மகாநாட்டுக்குத் தலைமை தாங்க இருப்பவர் மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள். அவருடைய குடும்பம் வழிவழியாக, தலைமுறை தலைமுறையாக, எத்த னேயோ அறங்களேப் பெருக்கி, வளர்த்து, நடத்திவருகிறது. அவற்றைச் சீரும் சிறப்புமாக எடுப்பாக இன்று நடத்தி வருகிருர் திருவாளர் ராமகிருஷ்ண முதலியார் அவர்கள். இச் சங்கம் தோன்றுவதற்கு, சங்கத்தின் தலைவராகஅமைந்து, அவர் கொடுத்த ஊக்கமும் ஆதரவுமே காரணமாக அமைந்தது எனில் அதில் மிகையொன்றும் இலது. அவ ருக்கும் நல் வரவு கூறுகிறேன்.

சங்கத்தின் உறுப்பினர்களாகவும் நிர்வாகிகளாகவும், செயற்குழுவினராகவும் அமைந்து தொண்டாற்ற இசைந்த அன்பர்கள் அனேவர்க்கும் வாழ்த்தும் வரவேற்பும் கூறுவ துடன், இன்று கூடியிருக்கும் உங்கள் அனேவர்க்கும்

சங்கத்தின் சார்பிலும் செயலாளர்களான எங்கள் சார்பிலும் வாழ்த்துத் தெரிவித்து வரவேற்கிறேன்.

இன்றைய இந்து அறநிலையச் சட்டத்தின் கீழ் தர்மகர்த்தர்களுக்குப் பொறுப்புக்கள் உண்டு; கடமைகள் உண்டு; தவறினால் தண்டனையும் உண்டு. ஆனால் இப் பொறுப்பையும், கடமையையும் நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரம் மாத்திரம் கிடையாது. அதிகாரம் இல்லாமல் பொறுப்பை மாத்திரம் எப்படி நிறைவேற்ற இயலும்? சட்டத்தின் படியும், விதிகளின்படியும், தர்மகர்த்தர்களுக்கு–அதாவது 'டிரஸ்ட் போர்டு'க்கு அறநிலையத்தின் நிர்வாக சம்பந்தமாக எந்த முடிவுக்கும் வர உரிமையிருக்கிறதே எனலாம்! ஆனால், அதே சமயத்தில் டிரஸ்ட்போர்டு செய்யும் எந்தத் தீர்மானத்தையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க நிர்வாக அதிகாரிக்கு விதியும் சட்டமும் அதிகாரம் அளிக்கின்றன. இதுவே தர்மகர்த்தர்களின் அதிகார வரம்புக்கு ஓர் அளவு கோல்.

தர்மகர்த்தர்கள் நடத்தப் பெறும் முறையைக் கூறலாம். தர்மகர்த்தர்கள் மாற்றாந் தாய்ப் பிள்ளைகளைப் போல்தான் பாவிக்கப் பெறுகிறார்கள். தர்மகர்த்தர்களிடம் அன்போடும் கௌரவமளித்தும் நடந்துகொள்ள வேண்டும் என்பதே நம் வேண்டுகோள்.

மேலும் அதிகார வரம்பைக் குறிக்கலாம். பேரன்புமிக்க அமைச்சர் அவர்கள் அன்றொருநாள் சட்டசபையில் தர்மகர்த்தர்கள், நிர்வாக அதிகாரிகள், அர்ச்சகர்கள் ஆகியவர்களின் கடமைகள், உரிமைகள் பற்றி இப்போதுள்ள சட்டங்களும் விதிகளுமே போதுமானவை எனவும், தெளிவாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். ஆனால், தர்மகர்த்தர்களின் அனுபவத்தில் அங்ஙனமில்லை. நிர்வாக அதிகாரிகள் இருக்கும் எல்லா ஆலயங்களிலுமே தர்மகர்த்தர்களுக்கும் அவர்களுக்கும் ஏதாவது ஒரு மோதல் ஏற்பட்டுக் கொண்டிருப்பதே இதற்குச் சான்று. ஆகவே, இது பற்றிய விதிகள் தெளிவாக வரையறுக்கப் படவேண்டியது அவசியம்.

சட்டத்தின்படி ஒவ்வொரு நிலையத்துக்கும் அதனதன் பழக்க வழக்கங்களுக் கேற்றபடி அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டம் அமலிலிருக்கிறது. ஒவ்வோராண்டும் பட்ஜெட் தயாரிக்கப் பெறும்பொழுது அக்கால நிலவரப்படிக் கணக்கிட்டு அங்கீகாரத்துக்கு அனுப்புகிறார்கள். ஏரியா கமிட்டியும், மற்ற அதிகாரிகளும் அந்தத் திட்டத்தைக் குறைப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். ஏன் என்பதற்கான காரணத்தையோ, அவர்களுடைய குறிக்கோளையோ குறிப்பிடுவதே கிடையாது. இதனால் அறச் செயல்கள் பெரிதும் தடைப்படுகின்றன.

அடுத்தபடியாக தணிக்கை: வழக்கமான தணிக்கை முறைகளோடு கூட அந்தக் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்றுள்ள வேலையையும் மதிப்பிடவேண்டும் (Audit of achievement) ஒவ்வொரு வருடத்துக் கணக்கையும் அவ்வருடம் முடிந்த உடனேயே தணிக்கை செய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும். ஆலயங்கள் வருவாய்க்குத் தக்கபடி கிரேடுகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. நிர்வாக அதிகாரிகள். அந்தக் கிரேடுப்படி நியமிக்கப் பெறுகிறார்கள். அதேபோல கணக்குவைக்கும் முறைகளும் தனித்தனியாக வரையறுக்கப் படவேண்டும். எல்லா நிலையங்களுக்கும் ஒரேமாதிரியான முறை இருப்பதால் நிர்வாகச் செலவு அதிகரிக்கிறது.

தங்கள் அறநிலையத்துக்கு நிர்வாக அதிகாரியைப் பொறுக்கிக் கொள்ளும் உரிமையை டிரஸ்ட் போர்டுக்கு அளிப்பது விரும்பத்தக்கது. இலாகாவினர் ஒரு Panel ஐ டிரஸ்ட்போர்டுக்குஅனுப்பி அவர்களில் ஒருவரை எடுத்துக் கொள்ளும்படிச்சொல்லலாம். ஒரு நிலையத்தின் அதிகாரியை மற்றொரு நிலையத்துக்கும் கூட்டாக அதிகாரியாக்குவதும், டிரஸ்ட் போர்டுக்கு முன்னறிவிப்பின்றியே மாற்றுவதும் நின்றால் நலம்விளையும்.

அறநிலைய சிப்பந்திகளின் சம்பளப் பிரச்னை: தலைமுறைகளாகத் தொண்டாற்றிவருவோர் பலர். காலில் நகம் முளைத்தநாள்முதலாகப் பணியாற்றுவோர் பலர். இவர்க

ளுடைய சம்பளம், படித்தரம் முதலியன ஐம்பதாண்டு களுக்கு முன்னிருந்ததைப் போலத்தான் இன்றும் இருந்து வருகின்றன. முன்னர் ஒரு நிலையத்தில் வேலைசெய்யும்எல்லா ருக்கும் ஒரேபடியாக குறைந்த ஊதியமே இருந்ததால் அதை ஆண்டவன் பணியாகக் கருதி நடந்துவந்தார்கள். இன்று நிர்வாக அதிகாரிகளின் சம்பளம், வருஷாந்திர சம்பள உயர்வு, லீவுக்குச் சம்பளம், பஞ்சப்படி என்றெல்லாம் சட்டப்படி நிர்ணயிக்கப்பெற்று அவர்கள் கண்முன்னு லேயே கொடுக்கப்பெறுகிறது. அடிப்படைச் சம்பளமே இருசாராருக்கு மிடையே மேடும் பள்ளமும் போல. இது மட்டுமா? ஓர் அறநிலையத்தில் தள்ளாத காலம் வரையில் வேலை செய்துவிட்டு தள்ளாமை காரணமாக ஒருவன் விலகி ஞல், அவனுக்கு அந்த ஸ்தாபனம் ஒரு காலணு தர முடியுமா? அவ்வளவேன்? வேலையிலிருக்கும் ஒருவன் இறந்துபோனுல் அவனுடைய ஈமக்கிரியைக்குக் கூட அந்த ஸ்தாபனத்தால் ஒரு நயாபைசா கூடத் தர இயலாது. எனில் ஆலய ஊழியர்கள் மனக் கசப்புக் கொள்வதிலும், தம் வேலையில் சிரத்தை யில்லாமலிருப்பதிலும் ஆச்சரிய மொன்று மில்லை. இந்தக் கசப்பு வளருமானுல்......வளர விட்டால்...இன்றே ஒரு பெரிய ஆலயத்தின் சிப்பந்திகளில் பலர் தொழிற் சங்க ஸ்தாபனத்தில் சேர்ந்து விட்டிருக்கிருர் கள். இது பரவாது என எதிர்பார்க்க முடியுமா? நிர்வாக அதிகாரிகளுக்கு இருப்பதைப் போலவே, மற்ற ஊழியர் களுக்கும் சம்பளத்தையும் மற்றவற்றையும் சட்டபூர்வமாக நிர்ணயிப்பது நல்லது என்பது என் கருத்து.

சட்டசபையில் அமைச்சரவர்கள் ஆலயங்களின் உபரி நிதியை வேறு இனங்களுக்குச் செலவிடும் உத்தேசம் இல்லை என்றறிவித்தார்கள். மிக்க மகிழ்ச்சி. உங்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆலயங்கள் சமூகத்தின் உடைமை என்பதிலும் அதன் உபரிநிதி சமூகத்துக்கே உபயோகப்பட வேண்டும் என்பதி லும் கருத்து வேற்றுமை கொள்வோரில்லை. உள்ள வேற் றுமை எல்லாம் எந்தச் சமூகத்துக்கு என்பதில் தான். இவ் விஷயத்தில் சங்கத்தினரின் கருத்து "அற நிலையம் எந்தச் சமயப் பிரிவைச் சார்ந்ததோ அந்தப் பிரிவினருக்கே உபரி

நிதி உபயோகமாக வேண்டும்'' என்றே நான் எண்ணு கிறேன். சொல்லப் போனுல், ஆலயங்களின் ஊழியர்களில் பலருக்கே 'உதவி' தேவைப்படுகிறது. காலத்துக்கு ஏற்ற வாறு ஊதியம் தர; அவர்களது பிள்ளைகள் தம் பணியை ஆற்றுவதற்கு வேண்டிய கல்வி பெற; அவர்களது தள்ளா மைக் காலத்தில் வறுமையால் வாடாமல் உயிர் வாழ்ந் திருக்க; அவர்களது ஈமக்ரியைகளுக்கு உதவ-இப்படி எத் தனேயோ விதமாக இந்த உதவியை அளிக்கலாம். அந்தந்த கிராமத்தில், வட்டத்தில் வசிக்கும் சமயப் பிரிவுக்கு இந்த உபரி நிதி பிரயோசனப் படும்படி வகை செய்யலாம்; சமய உணர்ச்சியும் ஞானமும் பெருக அது உபயோகிக்கப் படலாம்.

தவிர, ஒவ்வொரு சமயத்தையும் சார்ந்த அற நிலேயங் களின் உபரி நிதியையும் ஒருங்கு சேர்த்து (Pool) அந்தந்தப் பிரிவின் பாழடைந்தும், கிலமாயும் இருக்கும் கோயில் களேப் பழுது பார்க்கவும், பூஜையில்லாத கோயில்களில் பூஜைகள் நடைபெற ஏற்பாடுசெய்யவும், ஏழைக் கோயில் களின் தேவைகளேப் பூர்த்திசெய்யவும், அர்ச்சகர்கள், ஓதுவார்கள்,அத்யாபகர்கள்போன்றவர்களுக்குப் பாடசாலே கள் நடத்தவும் அதை உபயோகப்படுத்துவது இன்றைய நிலேயில் அத்யாவசியமானது. நியாயமாகவும் தேவைக்குத் தக்கவாறும் இந்த நிதியைப் பங்கீடு செய்ய ஒரு Grants Commission ஐ நியமிப்பது விரும்பத்தக்கது. இங்கிலாந்தில் இத்தகைய Charities Grants Commission இருப்பதாகத் தெரிகிறது. நம் நாட்டிலேயே University Grants Commission இருக்கிறதே!

இதை எல்லாம் ஆராய்வதற்கு முன்னுல் உபரி நிதி என்பது என்ன என்பது தெளிவுபடுத்தப் பெறுதல் அவசியம்.

அறநிலேயங்களின் கட்டிடங்கள் அனேத்தும் பொது மராமத்து இலாகாவாலோ, அல்லது அறநிலேய இலாகா விலேயே ஒரு தனி மராமத்து இலாகா அமைத்தோ குறிப் பிட்ட கால அட்டவணேப்படி பரிசீலிக்கப் பெறவேண்டும்.

ஒவ்வொரு அறநிலேயத்திடமிருந்தும் Contribution வாங்கும் சர்க்கார் இதைத் தம் கடமையாகக் கொள்ளவேண்டும்.

இன்னும் எத்தனேயோ சொல்லிக்கொண்டு போகலாம். காலந்தான் இடந்தரவில்லே. சர்க்காரின் மீதோ, இலாகாவின் மீதோ தர்மகர்த்தர்களாகிய எங்களுக்கு எவ்வித தாங்கலு மில்லே. சட்டத்தையும் தர்மத்தையும் அனுசரித்து எங்களா லியன்ற அளவு ஒத்துழைக்க நாங்கள் எப்பொழுதும் தயாரா யிருக்கிறோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள் கிறேன். எங்கள் சக்திக்கும் ஆர்வத்துக்கும் ஏற்றவாறு நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள பொதுத் தொண்டை, அறப் பணியை ஆற்றுவதற்கு எங்களுக்கு வாய்ப்பளியுங்கள் என்பதுதான் எங்கள் வேண்டுகோள். அமைச்சரவர்களின் தலேமையில் அந்தக் கோரிக்கை நிறைவேறும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு.

கடைசியாக ஒன்று. இப்போதுள்ள சட்டத்தைமாற்றி மறுபடியும் ஒரு புது அறநிலேயச் சட்டம் கொண்டுவரப் போவதாக சர்க்கார் இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு அறிவித்திருந்தது. சர்க்காரின் நோக்கத்தையும் முடிவை யும் தெரிந்துகொள்ள நாங்கள் ஆவலாயிருக்கிறோம். அதே சமயத்தில் சட்டம் வருமுன், அதைத் தயாரிக்கு முன், தர்மகர்த்தர்களேயும் கலந்துகொள்ள வேண்டும் என்று சர்க்காரை வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ்நாடு இந்து ஆலய, அறநிலைய தர்மகர்த்தர்கள் சங்கம்

(S. No. 136 *of* 1956)

முதல் அறிக்கை

கு. அய்யா. சுப்பிரமணிய முதலியார், செயலாளர்.
(தர்மகர்த்தர், திருமயிலை கபாலீச்சரம்.)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்பது பொய்யாமொழி. என்றும் சலித்துக்கொண்டிருக்கும் உலகில் நிலைத்து வாழும் நெறியைக் குறித்துக் காட்டுவன ஆலயங்கள்.

தமிழகத்தின் ஆலயங்கள் கல்லில், செம்பில், மண்ணில் மிளிரும் கவிதை; தமிழ் வாழ்க்கை மலர்ந்து மணம் வீசும் பூஞ்சோலை. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் வளர்த்த தாய் ஆலயம். தமிழனுடைய வாழ்வில் ஆலயம் கலந்துறவாடாத துறையே இல்லை. இது சரித்திரம் கூறும் உண்மை.

காலத்தின் வலிமையால், அரசியல் துறையில் ஏற்பட்டு வந்த மாறுதல்களால் சமூகத்தில் ஆலயம் வகித்த உன்னத நிலை சிறிது மங்கிவருகிறது. மக்களும் சமய வாழ்விலிருந்து படிப்படியாக விலகிவருகிறார்கள்.

உலகம் உயர, நாடு நலம் பெற, மக்களின் சமயப் பண்பு உயரவேண்டும். ஒரு தனிமனிதன் மட்டும் ஆத்மிக மேம் பாடு அடைந்துவிட்டால் போதாது. சமூகமே அத்தகைய

ஒரு மேம்பாடடைய வேண்டும். அடியார்கள் 'தொண்டர் கூட்டம்' வேண்டும் காரணமும் இதுவே.

சமூகம் ஆத்மிக வளர்ச்சி பெறப் பயிற்சி பெறும் இடமே ஆலயம், அறநிலையம். அது தன் பொறுப்பை மறந்தால், கைவிட்டால், அந்தச் சமயம், சமயத்தைப் பின் பற்றும் சமூகம் எல்லாமே வாழ்விழந்து போகும்.

காலத்தின் போக்காலும் மனிதன் தன் வாழ்க்கையின் லட்சியத்தைக் குறித்துக் கொண்டுள்ள மன விகாரங்களி ைலும் இன்று மனித இனம் தன் பண்பைச் சிறிது சிறிதாகக் கைவிடத் தொடங்கியிருக்கிறது. இத்தகைய விபரீதப் போக்கைத் தடுத்து தனிமனிதனை மட்டும் அல்லாமல், சமூகத்தையும் உய்விக்கும் மாபெரும் பொறுப்பு இன்று ஆலயங்களின் – அறநிலையங்களின் மீது விழுந்திருக்கிறது. இந்தப் பொறுப்பை ஏற்று, சமூகம் வாழ வழிகாட்டுவது ஆலயங்கள்-அறநிலையங்களின் கடமை.

இங்ஙனம் கருத்துக் கொண்டிருந்த சில தர்மகர்த்தர்கள் எமது வேண்டுகோளின்பேரில் சென்ற வருஷம் அக்டோபர் மாதம் 26தேதியன்று திருமயிலைக் கபாலீச்சரத்தில் கூடினர். அந்தக் கூட்டத்தில் இச் சங்கம் உருவாயிற்று. மேலும் பல ஆலயங்களின் தர்மகர்த்தர்களையும் கலந்து அவர்களது ஆதரவைப் பெறுவதற்காக 12—11—56 அன்று மற்றொரு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்திற்குச் சென்னை மாநகரத்திலுள்ள பல ஆலயங்களிலிருந்தும் தர்மகர்த்தர்கள் வந்து கலந்துகொண்டார்கள். கந்தசுவாமி கோயில்மெத்தை மண்டபத்தில் நடந்த அந்தக் கூட்டத்தில் 'தமிழ்நாடு இந்து ஆலய, அறநிலைய தர்மகர்த்தர்கள் சங்கம்' எனும் பெயரில் சங்கம் ஒன்றை நிறுவுவதென்று முடிவு செய்யப்பெற்றது.

ஆலயங்களில் இன்றியமையாது நடைபெறவேண்டிய நித்திய, நைமித்திய, காமிய பூஜா விசேஷங்கள் யாவும் எல்லா ஆலயங்களிலும் குறைவின்றி நடைபெறவும், வழிபாடுகளியற்றும் அர்ச்சகர்களுக்கு சாஸ்திர, சம்பிரதாய ஞானம் பயிற்றுவிப்பதும், ஆலயங்களில் வேதம்,

திருமுறைகள், பிரபந்தம், திருப்புகழ் முதலிய அருள் நூல்கள் ஓதப் பெறுவதற்காக ஆவன செய்தலும்; பல ஆலயங்கள் சென்று வழிபாடாற்ற விரும்பும் பக்தர்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துத் தருதலும்; ஆலயங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் சேகரித்தும், புதுப்பித்தும், செய்தும், தருதலும்; ஆலயங்களிலும், நாட்டிலும் சமயப் பிரசாரம் செய்தலும்; இந்து சமூகத்தில் அனாதைகளாக விடப்படும் குழந்தைகள் பராமரிப்பு, அனாதை சவ சம்ஸ்காரம் இவற்றிற்கு ஏற்பாடு செய்தலும்; வாழ்க்கைத் தேவை காரணமாக இந்துக்கள் பிற மதங்களுக்கு மாறுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்தலும்; ஆலய சிப்பந்திகள் நியாயமான வாழ்க்கை வசதிகள் பெற ஆவன செய்தலும்; பல்வேறு ஆலயங்கள் - அறநிலையங்களின் தர்மகர்த்தர்களுக்கும் இடையே நட்பும் கூட்டுறவும் உண்டாக்குதலும்; சென்னை அரசாங்கத்தாரின் இந்து சமய அறநிலைய இலாகாவுக்கும் தர்மகர்த்தர்களுக்கு மிடையே சுமுகமான உறவை நிலைநாட்டுதலும் ஆகிய பல நோக்கங்களை இச் சங்கம் கொண்டிருக்கிறது.

திரு. மணலி. ராமகிருஷ்ண முதலியார்அவர்கள் சங்கத்தின் தலைவராகவும், திருவாளர்கள் பம்மல் வரதராஜ முதலியார், ஏ.என். பரசுராமன், காட்டாவூர். சுப்பிரமணிய செட்டியார், டி. புருஷோத்தம் எம். எல். சி., வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் ஆகியவர்கள் துணைத் தலைவர்களாகவும், யானும், திரு. க. சோமசுந்தரமும் செயலாளர்களாகவும், திரு. வேங்கடரங்கம் செட்டியார் அவர்கள் பொருளாளராகவும், ஸ்ரீ ஞானசுந்தர நாயகர், ஸ்ரீ சி. ராதாகிருஷ்ணையா, ஸ்ரீ எஸ்.ஜி. ரங்கராமாநுஜம், டாக்டர் பி. கிருஷ்ணசாமி, ஸ்ரீ கே. கனகசபை பிள்ளை (திருக்கடவூர்), ஸ்ரீ டி. எஸ். சுவாமிநாத உடையார் (மன்னார்குடி) எம்.எல். ஏ. ஆகியவர்கள் செயற்குழுவினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

செயற்குழுவினர் 8 முறை கூடி, பல விஷயங்களைப் பற்றி ஆலோசித்தனர்.

சங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் முக்கியமானது "ஆலய ஒழுகலாற்று முறை"யினைத் தொகுக்கும்

முயற்சியாகும். இதற்கென ஒரு கமிட்டி திரு. க. சோமசுந்தரத்தை கன்வீனராகக் கொண்டு நியமிக்கப்பெற்றிருக்கிறது.

சமீபத்தில் அரசாங்கம் நிர்வாக அதிகாரிகளின் கிரேடுகளை மாற்றியமைக்கும் விதிகளை பிரசுரித்திருந்தனர். அமைச்சரவர்களிடம் தூது சென்று சங்கத்தின் கருத்து தெரிவிக்கப்பெற்றதன் பேரில் ஓரளவு சாதகமான திருத்தம் பெற்றது.

ஒன்றுகூடுவதன் மூலம் பலவற்றைச் சாதிக்கலாம் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல.

இந்து ஆலயங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் உள் நிர்வாகம், முறைகள், திட்டங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் தலையிடாமலும், அரசியல் கட்சிகளுடன் கூட்டுறவோ, தொடர்போ கொள்ளாமலும், ஆலயங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் மேன்மைக்கும் மறுமலர்ச்சிக்கும் பணி புரிவதையே கொள்கையாகக் கொண்ட இச் சங்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா இந்து ஆலயங்கள், அறநிலையங்களின் தர்மகர்த்தர்களும் உறுப்பினர்களாக வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏதாவதொரு ஆலயத்திலோ அறநிலையத்திலோ தர்மகர்த்தராக இருந்து பின் விலகியவர்களும் துணையுறுப்பினர் ஆகச் சேரலாம். 21 வயதுக்கு மேற்பட்ட இந்து எவரும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு ஆதரவாளர் ஆகச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் பெறலாம்.

இந்நேரம் என் சிற்றுரையைப் பொறுமையுடன் கேட்டதற்கு நன்றி.

கனம் அமைச்சரவர்களை மகாநாட்டைத் துவக்கி வைக்குமாறு உங்கள் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை அறநிலைய பாதுகாப்பு அமைச்சர்

திரு. எம். பக்தவத்சலம் அவர்கள்

திறப்புரையின் சாரம்

ஆலயங்கள் நம் நாட்டின் சிறந்த பொக்கிஷங்கள். நம் முன்னோர்கள் நமக்கு விட்டுப் போன கலைச் செல்வங்கள் அவை. மக்கள் பண்பாடுள்ள சீரிய வாழ்க்கையை நடத்தவே ஆலயங்களும் அறங்களும் ஏற்படுத்தப் பெற்றன. இந்தப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதும், மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் ஆன்மிகத் தன்மையையும் பெருக்கவும் பாடுபடுவதும் தர்மகர்த்தர்களின் கடமை.

தர்மகர்த்தர்கள் பதவி என்பது லேசானதல்ல. அது ஒரு பொறுப்பு. சமூகத்துக்குப் பொறுப்பு வகிக்கும் கடமை அந்தப் பதவிக்கு உண்டு. பொறுப்பையும் கடமையையும் பூரணமாக நிறைவேற்றவேண்டுமானால் தர்மகர்த்தர்கள் தமது முழுகவனத்தையும் அறநிலையங்களைக் காப்பதில் செலவிடவேண்டும். பதவி கிடைத்தவுடன் ஆசை தீர்ந்து விடக் கூடாது. மேற்கொண்ட பொறுப்பை, நிறைவேற்றுவதற்குப் போதிய அவகாச மிருப்பவர்களே தர்மகர்த்தர்களாகப் பதவி ஏற்கவேண்டும். இல்லாவிட்டால் அறநிலையத்துக்கும் நஷ்டம்; இவர்களுக்கும் நஷ்டம். இதை என் அனுபவத்திலிருந்தே கூறுகிறேன். 20 வருஷங்களுக்கு முன்னால் நான் இரு கோயில்களின் தர்மகர்த்தனாக இருந்திருக்கிறேன். அது பரம்பரை பாத்தியதை கொண்ட பதவிதான். ஆனால், பூரண கவனத்தையும் செலுத்த முடியாத காரணத்தால், அந்தப் பதவியை விட்டு விட்டேன். ஆகவே அவகாசமில்லாதவர்கள் தர்மகர்த்தர் பதவிக்கு ஆசைப்படாமலிருப்பது நல்லது.

தர்மகர்த்தர்களின் உரிமைகள் பற்றி ஆராய நீங்கள் கூடியிருப்பதாக சோமசுந்தரம் கூறினர். தொழிற் சங்க

ரீதியில் தர்மகர்த்தர்கள் தங்கள் உரிமைகளை வற்புறுத்தும் எண்ணம் மகாநாட்டினருக்கு இராது என்று நம்புகிறேன். உரிமை என்று பேசும்போது கடமையும் உடன் எழு கிறது. தர்மகர்த்தர்கள் தங்கள் பொறுப்பை, சேவையை திறம்படச் செய்வது குறித்து நீங்கள் இம் மகாநாட்டில் உங்கள் அனுபவங்களை ஒட்டித் தீர ஆராய்ந்து முடிவுகாண வேண்டும். ஆலயங்களையும் அறநிலையங்களையும் சிறப்பாக நடைபெறச் செய்ய என்னென்ன செய்யலாம் என்பதை நீங்கள் ஆலோசிக்கவேண்டும்

அரசாங்கம் மத ஸ்தாபனங்களில் அனுவசியமாகக் குறுக்கிட விரும்பவில்லை. சர்க்கார் சம்பந்தப்பட்டவரை, ஆலயங்களின் திறமையான நிர்வாகத்துக்கும், சரியான பரிபாலனத்துக்கும் உதவிசெய்ய சர்க்கார் தயாராயிருக் கிறது. ஆலயங்கள் சமய வளர்ச்சிக்கும், மக்களின் ஆன் மீக நாட்டத்துக்கும் பாடுபடும் நிலையங்களாக இருக்க வேண்டும்.

சமயச் சார்பற்ற சர்க்கார் மத விஷயங்களில் தலை யிடுவது சரியா?. சமய நிலையங்களின் நிர்வாகத்தை மேற் கொள்வது சரியா என்று கேள்வி கேட்கப்படுகிறது. சமயச் சார்பற்ற அரசாங்கம் என்பதாலேயே மத விஷயங் களைத் தட்டிக் கழித்துவிடவேண்டும் என்பது சரியல்ல. மக்களுக்காகவே அரசாங்கம். குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றும் மக்கள் தங்கள் சமயத்தைப் பின்பற்ற, அவர் களுக்கும் அவர்களின் சமய ஸ்தாபனங்களுக்கும் பாது காப்பும் வசதியும் செய்துகொடுப்பது சர்க்காரின் கடமை. மக்களுக்குப் பயன்படுகிற மத ஸ்தாபனங்களைச் சர்க்கார் கவனிப்பது அவசியம். அக்ரமங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்வதும் சரியானதே.

தமிழ்நாட்டில் பெரிய மடாதிபதிகள் பல கோயில் களுக்குப்பரம்பரைதர்மகர்த்தர்களாக இருந்துவருகிறார்கள், கோயில்களைப் பொறுத்தவரையில் இவர்களும் மற்ற தர்ம கர்த்தர்களைப் போன்றவர்கள்தான். இவர்கள் தன்னிச்சை யாக நடந்துகொள்வதாகப் புகார் வருகிறது. மடாதிபதிகள்

இந்தப் புகார்களுக்கு இடம் கொடுக்காமல் தங்கள் பதவியைச் சரிவர நிர்வகித்து பிறருக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

நமது கோயில்கள் இசை, சிற்பம் போன்ற அருங்கலை களும், தெய்வப் பற்றும் வளரும் புண்ணிய ஸ்தலங்கள். நமது எல்லாப் புராதனக் கலைகளும் ஆலயங்களில் தோன்றி வளர்ந்து மக்கள் வாழ்க்கையில் வேரூன்றியிருக்கின்றன. எனவே, அதை வளர்ப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதையும் நீங்கள் ஆலோசிக்கவேண்டும். ஆலய சிற்பக் கலையும், நாதசுரக் கலையும் நசித்துவருகின்றன. சர்க்கார் மகாபலிபுரத்தில் சிற்பக் கலைப் பள்ளியும், சென்னையில் இசைக் கருவிநிலையமும் ஏற்படுத்தி இருக்கிறது. நாதசுர கலையை வளர்க்க ஆலயங்கள் வழிகாணவேண்டும்.

காஞ்சிபுரத்தில் 20 வருஷத்துக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் வேதபாராயணமும் பிரபந்த பாராயணமும் வெகுவாகக் குறைந்துவிட்டிருக்கிறது. பல கோயில்களின் நிலைமை இதுதான். ஆலய நிர்வாகிகள் தேவாரம், திரு வாசகம், திவ்வியப் பிரபந்தம் போன்ற பக்தி நூல்களைப் பரப்ப ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

தேவஸ்தான நிதியைப் புறம்பான வகையில் செலவிட அரசாங்கம் விரும்புவதாகச் சிலர் புகார் செய்கிறார்கள். சர்க்காருக்கு அவ்வித எண்ணமில்லை. தேவஸ்தான பணத் தைக் கொண்டு பள்ளிக்கூடம் நிறுவலாமா என்று கேட்கி றார்கள். அறிவு இல்லாமல் நல் வாழ்க்கை நடத்துவது எப்படி? அறிவை வளர்ப்பவை பள்ளிக்கூடங்கள். உண்மையான அறிவில்லாமல் தெய்வபக்தி கொள்வது கடினம். அறிவில்லாத பக்தி வெறும் மூட பக்தியாகவே முடியும். எனவே மக்களின் அறிவை வளர்க்கும் பணியை தேவஸ்தான உபரி நிதியிலிருந்து செய்வதில் தவறில்லை.

தலைமையுரை

தலைவர். மணலி இராமகிருஷ்ண முதலியார்

(பரம்பரை தர்மகர்த்தர், சென்ன மல்லீச்வரர் & சென்னகேசவ பெருமாள் தேவஸ்தானம் & மணலி அறங்கள்)

அமைச்சர் அவர்களே! தமிழ்நாட்டு இந்து ஆலய தர்ம கர்த்தர்களே! பெரியோர்களே! சீமாட்டிகளே! கனவான் களே! வணக்கம்.

தமிழகத்து தேவாலய தர்மகர்த்தர்களின் இந்த முதல் மகாநாட்டிற்கு என்னைத் தலைவனுக நியமித்த உங்கள் எல்லோருக்கும் என் நன்றி. இப் பெருமைக்கு நான் உரித்தானவனல்லன். அறிவும் அனுபவமும் வயதும் முதிர்ந்த தக்கோர்கள் எத்துணையோபேர்கள் இருக்க என்னை இவ் வாசனத்தில் அமர்த்தியதற்கு மூலகாரணம் எம் முன்னோர்களின் அறப்பணிகள் என்றே நான் கருதுகின் றேன்.

குணங்களில் உயர்ந்து திகழும் ஸ்ரீ A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள் நம் அறத் துறைத் தலைவராகயிருப்பது நம் பெரும்பாக்கியம். பல வழிகளிலும் மதத் தொண்டு வளர பெரும் பாடுபட்டு வகைகள் செய்திருக்கிறுர். நமது அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் ஓர் தலைசிறந்த தெய்வ பக்தி யுடையவர். தென்னுட்டுக் கோயில்களின் வரலாறுகளை முற் றும் உணர்ந்தவர். அரசியல் துறையில் அவர் மேற்கொண்ட பணிகள் எல்லாவற்றிலும் வெற்றியும் முன்னேற்றத்தையும் கண்டவர். அவர் நம் துறை அமைச்சராகத் திகழ்ந்து இங்கு நம் மகாநாட்டைத் துவக்கி வைத்திருப்பது நமக்குப் பெருமையும் ஊக்கத்தையும் அளிக்கிறது.

தமிழகத்தின் பல கேந்திரங்களில் திகழும் தேவாலயங் கள் நம் நாட்டுக் கலையின் சரிதத்தையும் நம் முன்னோர்களின்

வாழ்க்கைத் திறத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. நம் நாட்டு கலாச்சாரம் தெய்வீக வழிபாட்டுடன் இரண்டறக் கலந்திருந்தது. எத்தொண்டும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப் படுவதாகக் கொண்டதால் நம்நாட்டுக் கலைகள் எழில் மணம் குறையாமல் என்றைக்கும் உரியதாய் மக்கள் இதயத்தைக் கவருகின்றனவாய் திகழ்கின்றன. அக் கோயில்களை நன்கு பராமரித்து வந்த அறக்காப்பாளர்களே இக் கலைக் காப்பாளர்கள்.

நாம் நம் கோயில்கள் வாயிலாக வளர்க்கும் அறம் நம் மக்களின் தூய வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்க முற்படுவது நம் முதல் கடமை. இக் கடமையை எவ்வாறு நாம் செலுத்தவேண்டுமென்பதை ஆலோசித்து தீர்மானித்து அதன்படி செயலாற்ற வகை செய்வதுதான் இம் மகா நாட்டின் முதல் நோக்கம்.

தேவாலயங்களையும் அவைகளைச் சார்ந்த தனிக் கட்டடங்களையும் பரிபாலிக்கும் பணியில் இரண்டுபிரிவுகள் இருக்கின்றன. முதலாவது இறைவன் வழிபாடு; தொன்று தொட்டு வரும் வழக்கங்களை ஒட்டி வகுத்த விதிகளின்படி வழிபாடுகளையும் திருவிழாக்களையும் செய்விப்பது. மற்றொன்று அப் பணிகள் சரிவரச் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பரிபாலிப்பது. நம்மைப் பொறுத்தமட்டில் இந்த இரண்டு அம்சங்களையும் குறைவற கவனிக்க வேண்டியது அத்தியாவசியம். இன்று அமுலிலிருக்கும் சட்டங்களினால் அறக் காப்பாளர்களின் ஊக்கத்திற்கும், ஆக்கத்திற்கும் குறைவை உண்டாக்குகிறது.

இன்று நாம் கலந்து மேற்கொள்ளும் தீர்மானங்கள் செயல்முறையில் நிறைவேற்றக் கூடியவையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இவ் எளியேனுக்கு இப் பெரும் வாய்ப்பு தந்தமைக்கு மறுமுறை நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

3—11—57ல் நடந்த முதல் மகாநாட்டின்

தீர்மானங்கள்

1 அறநிலைய இலாகா அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் அறுபதாண்டு நிறைவு பெற்றது பற்றி இம் மகாநாடு அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கிறது.

2 ஆலயங்களில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப் பெறுபவர்கள் ஆஸ்திகத்தன்மையும் அதற்கென ஒரு தனிப் பயிற்சியும் பரீட்சையும் கொடுத்து, அதில் தேறுபவர்களை மாத்திரமே நியமிக்க வேண்டும் என்றும், இயன்றவரை அந்தந்த சமயப் பிரிவையே அனுசரித்து நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்றும் இம் மகாநாடு அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்கிறது.

3 தற்சமயம் அமுலில் உள்ள, ஜமீன் ஒழிப்புச் சட்டம் (Estate abolition act,) வாடகைக் கட்டுப்பாடு சட்டம், நியாய வாரச் சட்டம் ஆகியவை காரணமாக ஆலய அறநிலையங்களின் வருமானம் பெரிதும் குறைந்துவிட்டிருக்கிறது. அந்த நஷ்டத்தை ஈடு செய்யும் அளவுக்கு வருமானத்தை அதிகரிக்க ஆவன செய்யும்படி இம் மகாநாடு சர்க்காரைக் கோருகிறது.

4 ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள வருமானம் மிகுந்த ஆலயங்களின் உபரி நிதியை அந்தந்த ஜில்லாவில் சேமித்து, ஜில்லா அளவில் பூஜையில்லாத கோயில்களில் பூஜைகள் நடைபெறவும், போதிய வருமானம் இல்லாத ஆலயங்களின் செலவைச் சரிக்கட்டவும், பாழடைந்தும், இடிந்தும் கிடக்

கும் ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யவும் அந்த நிதியை உபயோகிக்க வேண்டும் என்று கோருவதென்றும், அத்தகைய ஆலயங்கள் பற்றி இலாகாவுக்கு ஆலோசனை சொல்ல இச் சங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லா கமிட்டிகள் அமைக்கவேண்டும் என்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

5 வேலூர் கோட்டையில் உள்ள ஜலகண்டேச்வரர் சிவாலயத்தில் மறுபடியும் பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் நடத்தி வழிபாட்டுக்கு உரியதாக்கவேண்டும் என்றும், சர்க்கார் இதில் எவ்வித தயக்கத்தையும் காட்டக்கூடாதெனவும், இம் மகாநாடு அறநிலைய அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

6 ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்கையில் பழமையான கலாசாரத்துக்கும், சாஸ்திரங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும் விரோதமில்லாதவாறு தக்க பயிற்சி பெற்ற ஸ்தபதிகளைக் கொண்டு ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யுமாறு தர்மகர்த்தர்களை இம் மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

7 ஒவ்வொரு ஆலயமும் புனிதத் தன்மையும் சுத்தமும் நிறைந்த சூழ்நிலையில் விளங்கக் கூடியவாறு ஒரு 'அழகுபடுத்தும் திட்டம்' வகுத்து நிறைவேற்றுமாறும், தினந்தோறும் ஆலயங்களில் சமய ஒலிபரப்பு நடைபெற ஏற்பாடு செய்யுமாறும் தர்மகர்த்தர்களை இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

8 ஆலயங்களுக்குப் போவதன் அவசியத்தை இன்றைய நிலையில் வற்புறுத்துவதற்காக ஆண்டுதோறும் யாத்ரீகர் வாரம் கொண்டாடவேண்டும் என்றும், அக்காலத்தில் ஆலயங்களில் பஜனைகள், சொற்பொழிவுகள், தெய்வீக

சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்தியும் பக்தர்களுக்கு மனம் ஈடுபட்டு பக்தி செய்ய வசதிகள் செய்து கொடுத்தும் ஆவன செய்யவேண்டும். இதுபற்றி ஆலயங்களின் தர்மகர்த்தர்களே, வேண்டும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறும், இலாகாவினரும் இதற்கான ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

9 ஆலயங்களில் உள்ள பூஜார்ஹமில்லாத சிலைகளையும் விக்ரகங்களையும் ஆலய தர்மகர்த்தர்கள் பத்திரமாகப் பாதுகாக்கவேண்டும் என்றும், எக் காரணத்தைக் கொண்டும் பிறர் அவற்றைக் கைக்கொள்ளும்படி விடக் கூடாதென்றும், அத்தகைய சிற்பங்களைக் கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் தஞ்சை கலைக் கூடம் போல, கலைக் கூடம் (Museum) ஏற்படுத்தி, அவற்றை பாதுகாக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் இம் மகாநாடு சர்க்காரை வேண்டிக்கொள்கிறது.

10. சைவ, வைணவ சமய தத்துவங்களையும், கலைகளையும் போதிக்கும் கல்லூரி ஒன்றை நிறுவ அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இதற்குத் தங்களிடமுள்ள உபரி நிதித் தொகையையும், வருமான மிகுந்த ஆலயங்களில் தேங்கியிருக்கும் நிதியையும் உபயோகிக்க வேண்டும் என்று இம் மகாநாடு சர்க்காருக்கு யோசனை கூறுகிறது.

11 சமுதாய நல திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின் மானியங்களைக் கொண்டு கோயில் குளங்களை புனரமைப்புசெய்ய,வேண்டிய நடவடிக்கைகளைத் தர்மகர்த்தர்களும் சர்க்காரும் சேர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

12 'இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்டு'வெளியிடும் பஞ்சாயத்து புல்லட்டின் போல H. R. & C. E. இலாகாவும் ஒரு புல்லட்டின் வெளியிட்டு அதில் எல்லாவிதமான உத்தரவுகளையும், விதிகளையும், செய்திகளையும் பிரசுரித்து எல்லா ஆலய, அறநிலையங்களுக்கும் அனுப்பிவர வேண்டும் என்று இம் மகாநாடு இலாகாவைக் கேட்டுக்கொள்கிறது.

13 எல்லா ஆலய, அறநிலையங்களுக்கும் இலாகாவிலிருந்து வரும் கடிதப் போக்கு வரத்துக்கள் அனைத்தும் தர்மகர்த்தர்களுக்கே நேராக அனுப்பப்பெறவும், பதில்களும் அவர்கள் மூலமாகவே அனுப்பப்பெறவும் வேண்டும் எனவும் அனுஷ்டானத்தில் இது இலாகாவினரால் நடைமுறைக்கு கொண்டுவரப்படவேண்டும் எனவும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

14. தற்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கும் *City Tenants Protection Act.* அமுலிலிருந்து கோயில்களுக்குச் சொந்தமான மனைகளுக்கு விலக்களிக்கவேண்டும் என்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

15. ஒவ்வொரு சிவாலயத்திலும் தேவாரங்களைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவும் திருமுறைகளை ஓதுவதற்கும் தக்கவர்களை ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அதுபோல விஷ்ணு ஆலயங்களில் பிரபந்தங்களைக் கற்றுக்கொடுக்கவும் ஓதவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

16. நேர்மையான முறையில் நடத்தப்பட்டுவரும் கம்யூனிட்டி சமூக தேவஸ்தானங்களில் தர்மகர்த்தா நியமனம், அந்தந்த கம்யூனிட்டிகளில் தேர்தல் பேரில் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது

தமிழ்நாடு
இந்து ஆலய அறநிலைய தர்மகர்த்தர்கள் சங்கம்

(S. No. 136 of 1956)

வேண்டுகோள்

இந்து ஆலயங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் உள் நிர்வாகம், முறைகள், திட்டங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் தலையிடாமலும், அரசியல் கட்சிகளுடன் கூட்டுறவோ தொடர்போ கொள்ளாமலும், ஆலயங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் மேன்மைக்கும் மறுமலர்ச்சிக்கும் பணி புரிவதையே கொள்கையாகக் கொண்ட இச் சங்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா இந்து ஆலயங்கள், அறநிலையங்களின் தர்மகர்த்தர்களும் உறுப்பினர்களாக வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

உறுப்பினரின் ஆண்டுச் சந்தா ரூ. 5/-

பிரவேசக் கட்டணம் ரூ. 1/-

ஏதாவதொரு ஆலயத்திலோ அறநிலையத்திலோ தர்மகர்த்தராக இருந்து பின் விலகியவர்களும் துணை யுறுப்பினர் ஆகச் சேரலாம். 21 வயதுக்கு மேற்பட்ட இந்து எவரும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக் குட்பட்டு ஆதரவாளர் ஆகச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பெறலாம்.

துணையுறுப்பினர், ஆதரவாளர் ஆண்டுச் சந்தா ரூ. 3/– இவர்களும் பிரவேசக்கட்டணம் ரூ. 1/- செலுத்தவேண்டும்.

இச் சங்கம் சங்கப் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப் பெற்றிருக்கிறது. **விதிகள் புத்தகம்** அச்சிடப் பெற்றிருக்கிறது. விலை 0–8–0. (தபால் செலவு உள்பட). அணு எட்டு மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:— விதிகள் புத்தகத்தையும், அச்சிட்ட மனுக்களையும் "செயலாளர், 'தமிழ்நாடு இந்து, ஆலய அறநிலைய தர்மகர்த்தர்கள் சங்கம்' 142, சாமிநாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2." என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அங்கத்தினர்கள்

1. திரு சி. ஞானசுந்தர நாயகர்,
(தருமகர்த்தர்:ஸ்ரீவடபழநிஆண்டவர்தேவஸ்தானம்,சென்னை)

2. திரு C. ராதாகிருஷ்ணையா,
(தருமகர்த்தர்: ஜகந்நாதப் பெருமாள், திருமழிசை ஆழ்வார் தேவஸ்தானம், திருமழிசை)

3. திரு. S. G. ரங்கராமானுஜம் BAR-AT-LAW
(தருமகர்த்தர்: ஸ்ரீ மாதவப்பெருமாள் தேவஸ்தானம், சென்னை.)

4 திரு Dr. P. கிருஷ்ணசுவாமி, L. M. P., J. P.
(தருமகர்த்தர்: ஸ்ரீகங்காதரேச்வரர் தேவஸ்தானம், சென்னை)

5. திரு K. கனகசபைப் பிள்ளை.
(தர்மகர்த்தர்: பிச்சக்கட்டளை, திருக்கடவூர்)


6. திரு T. S. சுவாமிநாத உடையார், M. L. A.
(தருமகர்த்தர்: ஸ்ரீ ராஜகோபால சுவாமி தேவஸ்தானம், மன்னார்குடி.)

7. திரு T. S. வடிவேலு முதலியார்.
(தருமகர்த்தர்: ஸ்ரீ ஜகந்நாதப் பெருமாள், திருமழிசை ஆழ்வார் தேவஸ்தானம், திருமழிசை.)

8 திரு T M சுப்பிரமணிய ஐயர், B A., B.L.
(தருமகர்த்தர்: ஸ்ரீஅழகிய மன்னார் தேவஸ்தானம், பாளையங்கோட்டை)

9. திரு V. வேணுகோபால் பிள்ளை,
(தருமகர்த்தர்: அல்லூரி வெங்கடாத்திரி மடம், சென்னை)

10 திரு P. C. வேலு முதலியார், J. P.
(தருமகர்த்தர்: ஸ்ரீ லட்சுமி அம்மன் தேவஸ்தானம், சென்னை)



" சென்னை நகர இந்து ஆலய அறநிலையங்களின் தருமகர்த்தர்கள் ஆலோசனைக் கூட்டம் "
12-11-1956